நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை-5

ந.க.எண்.77587/2001/எப்1 | சுற்றறிக்கை | நாள்:19.2.2002

பொருள்: பணியமைப்பு-தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி- பணியாளர்களை ஓய்வு பெறும் வயதில் ஓய்வு பெற அனுமதிக்காமல் கூடுதலாக பணிபுரிய அனுமதித்துள்ளது முறைகேடுகள் தக்க அறிவுரை வழங்கப்படுகிறது.

***

அ. தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணியில் பணிபுரியும் பணியாளர்களில் குறிப்பாக தினக்கூலி பணியாளர்களை வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வுபெறும் போது, 58 வயதில் ஓய்வு பெற செய்வதற்கு பதிலாக 60 வயதில் ஓய்வு பெற அனுமதித்ததற்கும் இதனால் நகராட்சியில் நிதி இழப்பிற்கு காரணமாகவும், மேலும், இது தொடர்பாக பிழை ஏற்பு ஆணைகள் தருமாறும் பின்னேற்பு வழங்கிடுமாறும் கோரியும், தணிக்கைத் தடைகளை நிவர்த்தி செய்வதற்காகவும், பல நகராட்சிகளிலிருந்து செயற்குறிப்புகள் பரிந்துரை செய்யப்பட்டு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலம் வந்த வண்ணம் உள்ளது. மேற்காணும் பொருள் தொடர்பாக, சில பிரேரணைகள் மீது அரசாணைகளும் வெளியிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற செயற்குறிப்பினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு, அரசிடமிருந்து பின்னேற்பு கோரப்படுவது தொடர்ந்து நீடித்து வருகிறது என்பதனை சுட்டிக்காட்டப்படுகிறது.

தினக்கூலி பணியாளர் உட்பட பணியாளர்களை பொறுத்தமட்டில் நியமன அதிகாரி நகராட்சி ஆணையராக இருக்கும் பட்சத்தில் பணியாளர் மூப்பு பற்றி நகராட்சி ஆணையர் தனி கவனம் செலுத்தி மேல் நடவடிக்கை தொடர வேண்டியது முக்கிய கடமையாகும். மேற்படி பணியாளர் தொடர்பாக அரசாணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள உத்தரவினை கடைபிடித்து, தினக்கூலி பணியாளர்/மற்றும் பிற பணியாளர் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற 3 ஆண்டுகளுக்கு முன்னரே, ஓய்வுபெறும் பணியாளர் பட்டியலினை தயாரித்து குறிப்பிட்ட தேதியில் அவர்களது ஓய்வு பெறும் வயது 58 வயதில் பூர்த்தி அடைந்துள்ளனரா? என்ற விவரத்தை பணிபதிவேட்டினை நன்கு ஆய்வு செய்யப்பட்டு அதனுடைய தொகுப்பு அறிக்கையினை மாதாந்திர வாரியாக, மேற்படி பொருள் தொடர்பான பட்டியலை கண்காணிக்க வேண்டியது அந்நகராட்சியிலுள்ள சம்மந்தப்பட்ட உதவியாளர், மேலாளர் மற்றும் நகராட்சி ஆணையர் முழு பொறுப்பாகும். இதையும் மீறி ஒரு பணியாளர் தன் பணிக்கால முதிர்ச்சியையும்தாண்டி பணி ஓய்வு பெறும் சூழ்நிலை ஏற்படுமானால் அதனால் உருவாகும் இக்கட்டான விளைவுகளுக்கும் நிதி இழப்பிற்கும், சம்பந்தப்பட்ட உதவியாளர் மேலாளர் மற்றும் நகராட்சி ஆணையரே முழுப் பொறுப்பாளர் ஆவார்கள் என்று இதன்மூலம் தெளிவுபட அறிவிக்கப்படுகிறது.

இதற்கு மாறாக வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெறுவோரின் ஓய்வூதிய பிரேரணையினை நகராட்சி ஆணையரால் உள்ளாட்சி நிதித்துறைக்கு பரிந்துரை செய்யப்பட்டு, உள்ளாட்சி நிதித்தணிக்கை குழுவினரால் தணிக்கை செய்யப்பட்டு, அத்துறையினரால் சுட்டிக் காட்டின பின்னரே, சில நகராட்சி ஆணையர்கள் அதனை அடிப்படையில் வைத்து பின்னேற்பு கோரப்பட்டு வருவது சாதாரண விஷயமாக கருதப்படுவதும் மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

பணிமூப்பு நாளை சரியாக கணக்கிடாமல் விட்ட அனைத்து பணியாளர்கள்/ நகராட்சி ஆணையர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதற்காக நிதி இழப்பினை அவர்களது ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்பதனை அறிவுறுத்தப்படுகிறது.

இனிவரும் காலத்தில் இது மாதிரி நிகழ்வுகள் நிகழா வண்ணம் உடனுக்குடன் ஆய்வு செய்து கண்காணிக்கப்பட வேண்டும் என்பதனை இச்சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட அனைத்து அறிவுரைகளையும் தவறாமல் அனைத்து நகராட்சி ஆணையர்கள் கடைபிடித்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேற்படி சுற்றறிக்கையினை கிடைக்கப்பெற்றமைக்கு உடன் ஏற்பளிப்பினை அளிக்குமாறு கோரப்படுகிறது.

ஒம்/கா. இஸ்மத்பாட்சா
நகராட்சி நிர்வாக ஆணையருக்காக.

<u>பெறுநர்</u>

அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.

<u>நகல்</u>

இவ்வலுவலக நிதி ஆலோசகர் மேசைக்கு.
இவ்வலுவலக கண்காணிப்புப் பொறியாளர் மேசைக்கு.
இவ்வலுவலக 'டி' பிரிவு கண்காணிப்பாளர்/உதவியாளர்.
உதிரி/ இருப்புக்கோப்பு.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

கெ.ஜெ. [signature]
கண்காணிப்பாளர். 26/4/2002

மாபு/22/2